# கோயம்புத்தூர் மாநகராட்சி

## 2021-22 -- 2023-24ம் ஆண்டிற்கான மாதாந்திர வாடகை இனங்களுக்கான பொது ஏலம், மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

| | |
|---|---|
| காலம் | ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை (நிபந்தனைகளுடன்) |
| பொது ஏலம் , மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் நாள் | 16.09.2021 |

| | |
|---|---|
| மின் ஏலம் நடைபெறும் நேரம் | காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை |

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் நேரம் | மதியம் 12.00 மணி முதல் நண்பகல் 1.00 மணிவரை |

| | |
|---|---|
| பொது ஏலம் நடைபெறும் நேரம் | பிற்பகல் 3.00 மணி முதல் |

| | |
|---|---|
| மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நேரம் | பிற்பகல் 2.00 மணிக்கு |

2021-22– 2023-24ம் ஆண்டிற்கான கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான கீழ் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கான பொது ஏலம், மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி “உள்ளது உள்ள நிலையில்” ஆணையர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலர்களால், மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்தில், மேற்குறிப்பிட்டுள்ள நாளில் நடைபெறும். ஏலம் கோர விருப்பம் உள்ளவர்கள் தங்களை பற்றிய முழுவிபரத்துடன் நிபந்தனையின் வரிசை எண்.2ல் தெரிவிக்கப்பட்ட உரிய குத்தகை இனத்திற்கான வைப்புத்தொகையினை ரொக்கமாகவோ அல்லது “ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி” என்ற பெயரில் எடுக்கப்பட்ட வங்கி வரைவோலையாகவோ மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி ஏலப்பதிவு செய்து கொள்ளப்பட வேண்டும்.

மின் ஏலம் கோருபவர்கள், உரிய வைப்புத் தொகையினை ஏலம் நடைபெறும் முந்தைய நாள் 15.09.2021 அன்று காலை 10.00மணி முதல் மாலை 5.00மணி வரை மாநகராட்சி மண்டல அலுவலகத்திலோ அல்லது மாநகராட்சி இணைய தளம் www.ccmc.gov.in வழியாகவோ பதிவு செய்து, அதற்கான user ID பெற்று மேற்குறிப்பிட்ட மின் ஏலநேரத்தில் பங்கு கொள்ள வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பம் உள்ளவர்கள், உரிய வைப்புத்தொகையினை ஏலம் நடைபெறும் நாளின் நண்பகல் 12.00மணிக்குள் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி ஏலப்பதிவு மேற்கொண்டு, ஏலக்கோரிக்கையினை நண்பகல் 12.00மணி முதல் 1.00மணிக்குள் மாநகராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டிக்குள் சேர்க்கப்பட வேண்டும்.

பொது ஏலம் கோருபவர்கள், உரிய வைப்புத் தொகையினை ஏலம் நடைபெறும் தினத்தின் நண்பகல் 12.00மணிக்குள் சமர்ப்பித்து, ஏலப்பதிவுகள் மேற்கொண்டு, 3.00மணிக்கு நடைபெறும் பொது ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

| வரிசை எண் | கடைகளின் விபரம் | கடைகளின் எண்ணிக்கை | கடை எண் | கடை அளவு (சதுரடியில்) |
|---|---|---|---|---|
| 1 | ஒப்பணக்கார வீதியில் உள்ள மாநகராட்சி பள்ளி எதிரில் உள்ள மாநகராட்சி வணிக வளாகம் | | | |
| | தரை தள கடை | 1 | 8 | 143.93 |
| | முதல் தள கடைகள் | 5 | 9 | 196 |
| | | | 10 | 196 |
| | | | 11 | 196 |
| | | | 12 | 137.81 |
| | | | 13 | 453.25 |
| 2 | வார்டு எண்.52 சத்திரோடு புல் மார்கெட் மாநகராட்சி வணிக வளாக தரைதள கடைகள் | 4 | 2 | 110 |
| | | | 3 | 110 |
| | | | 5 | 110 |
| | | | 4 | 228 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வார்டு எண்.72 வ.உ.சி பூங்கா அருகில் உள்ள தரைதள கடைகள் | 4 | 1 | 160 |
| | | | 4 | 160 |
| | | | 6 | 160 |
| | | | 8 | 160 |
| 4 | வார்டு எண்.80 மரக்கார நஞ்சப்பா கவுண்டர் வீதியில் உள்ள மாநகராட்சி வணிக வளாக தரைதள கடைகள் | 4 | 2 | 80 |
| | | | 3 | 120 |
| | | | 4 | 170 |
| | | | 5 | 170 |
| 5 | வார்டு எண்.80-ல் தியாகி குமரன் வீதியில் உள்ள மாநகராட்சி வணிக வளாகம் | | | |
| | தரைதள கடைகள் | 4 | 4 | 112.12 |
| | | | 5 | 112.12 |
| | | | 6 | 112.12 |
| | | | 7 | 244.12 |
| | முதல்தள கடைகள் | 7 | 8 | 112.12 |
| | | | 9 | 112.12 |
| | | | 10 | 112.12 |
| | | | 11 | 112.12 |
| | | | 12 | 112.12 |
| | | | 13 | 112.12 |
| | | | 14 | 244.12 |
| | மொத்தம் | 29 | | |

## நிபந்தனைகள்

1. ஒவ்வொரு கடையும் தனித்தனி இனமாக ஏலம் விடப்படும்.
2. மாநகராட்சி கடைகளுக்கு கீழ்க்காணும் சதுரடி அளவுகளின் அடிப்படையில், வைப்புத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | கடையின் அளவு | வைப்புத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 250 சதுரடி வரை | ரூ. 50,000/- |
| 2 | 251 சதுரடி முதல் 500 சதுரடி வரை | ரூ.1,00,000/- |
| 3 | 501 சதுரடி முதல் 1000 சதுரடி வரை | ரூ.1,50,000/- |
| 4 | 1001 சதுரடிக்கு மேல் | ரூ.2,00,000/- |

3. ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் ஏதாவது ஒரு கடைக்கு வைப்புத்தொகை செலுத்தினால் போதுமானது. பொது ஏலத்திற்காக செலுத்தப்பட்ட வைப்புதொகை, சம்பந்தப்பட்ட கடைக்கு உறுதி செய்யப்படாத பட்சத்தில், அதே வைப்பு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வேறு கடைக்கு ஏலம் கோரலாம். மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியினை பொருத்தவரை எந்த கடைக்கு வைப்புத்தொகை செலுத்தப்பட்டதோ அக்கடைக்கு மட்டுமே மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட வேண்டும்.
4. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பம் உள்ளவர்கள் உரிய வைப்புத் தொகையினை ஏலம் நடைபெறும் தினத்தின் நண்பகல் 12.00மணிக்குள் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி, ஏலப்பதிவு செய்து ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும்.
5. பொது ஏலம் மற்றும் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான இதர நிபந்தனைகள் மண்டல அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒம்)ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.